# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பொருட்களும் சேவைகளும் (ஒழுங்குபடுத்துதலும் பேணுதலும்) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003. மாச்சு மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பொருட்களும் சேவைகளும் (ஒழுங்குபடுத்துதலும் பேணுதலும்) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ ஓ. 20/2003
4745

**இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே பகைமைகள் ஏற்படுவதன் விளைவாக எழக்கூடிய சாத்தியம்கொண்ட தட்டுப்பாடுகளைக் கையாள்வதற்கான உத்தியொன்றுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் : சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான பொருட்களின் வழங்குகைகள் கிடைக்கக் கூடியனவாகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய பொருட்களை நியாயமான விலைகளில் சமமாக விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் : பகிரங்க வாழ்வுக்கு அத்தியாவசியமான பயன்பாட்டுச் சேவைகளின் பேணுகையை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய சேவைகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் : அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இனிவரும் காலத்தில் குறித்தசில நாட்டினங்களுக்கிடையே ஆயுதந் தாங்கிய பகைமைகள் ஏற்படும் சாத்தியம் உள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் ஆயுதந்தாங்கிய பகைமைகள் ஏற்படுகின்றமை, இலங்கைச் சமுதாயத்தினரின் வாழ்வுக்கு அத்தியாவசியமான ஏதேனும் பொருளின் வழங்குகைகளிலான தட்டுப்பாட்டை விளைவிக்கும் சாத்தியம் கொண்டதாக அல்லது அத்தகைய பொருட்களின் வழங்குகைகளைத் தொடர்பிறுக்கும் சாத்தியம் கொண்டதாக உள்ளதாதலாலும், அதன்மூலம் அத்தகைய பொருளின் தட்டுப்பாட்டை விளைவிக்குமாதலாலும் அல்லது பகிரங்க வாழ்வுக்கு அத்தியாவசியமான பயன்பாட்டுச் சேவைகளைப் பேணுவதில் இடையீட்டை விளைவிக்குமாதலாலும் :

அத்துடன் சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான பொருட்களின் கிரமமான வழங்குகையொன்று கிடைக்கக் கூடியதாகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும், பாவனையாளர்களுக்கு நியாயமானவொரு விலையில் அத்தகைய

பொருட்களின் ஒப்புரவான விநியோகிப்பையும், பகிரங்க வாழ்வுக்கு அத்தியாவசியமான பயன்பாட்டுச் சேவைகளின் இடையீடில்லாத பேணுகையையும் உறுதிப்படுத்துவதற்கும், அத்தகைய சேவைகளுக்கான விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அவசியமானவாறான அத்தகைய தத்துவங்களை அரசாங்கம் தமக்குரித்தாக்குவது அவசியமாகவுள்ளதென இப்போது தோன்றுகின்றதாதலாலும் :

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. (1) இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பொருட்களும் சேவைகளும் (ஒழுங்குபடுத்துதலும் பேணுதலும்) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், சட்டத்தின் ஏற்பாடுகள், காலத்துக்குக் காலம், அமைச்சரவையின் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், ஒரு தடவையில் ஒரு மாதத்தை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிகளுக்கு அமைச்சரினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும் : எவ்வாறாயினும், சட்டத்தின் மொத்த நடைமுறைக்காலப்பகுதி கூட்டுமொத்தத்தில் மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதில், அமைச்சர் பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் :—

(அ) இலங்கைக்கு வெளியே ஆயுதந்தாங்கிய பகைமைகள் தொடர்ந்திருக்கும் சாத்தியக்கூறு ;

(ஆ) சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான ஏதேனும் பொருளின் தட்டுப்பாட்டை விளைவிக்கின்றதாக அத்தகைய பொருளின் வழங்குகைகளின் விநியோகிப்பில் தொடர்பறுத்தல் இருக்கும் சாத்தியக்கூறு ;

(இ) பகிரங்க வாழ்வுக்கு அத்தியாவசியமான ஏதேனும் பயன்பாட்டுச் சேவையைப் பேணுவதில் ஏதேனும் இடையீடு இருக்கும் சாத்தியக்கூறு ; அத்துடன்

(ஈ) அத்தகைய பொருட்களின் கிரமமான வழங்குகை கிடைக்கக்கூடியதாகவிருப்பதனையும் அத்தகைய பயன்பாட்டுச் சேவைகளின் இடையீடில்லாத பேணுகையையும் உறுதிப்படுத்துவதற்கான தேவை.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளை, அது ஆக்கப்பட்டவுடனேயே அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய காலத்தின்போது பாராளுமன்றம் அமராதிருப்பின், கட்டளையானது, பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வில் அங்கீகாரத்துக்காக அவ்வாறு இடப்படுதல் வேண்டும்.

(4) மேலே தரப்பட்டுள்ள மூன்று மாத காலப்பகுதி முடிவுறுமுன்னர், சட்டத்தின் நடைமுறையை மேலதிகக் காலப் பகுதியொன்றுக்கு நீடித்தல் அவசியமாகவுள்ளதெனப் பாராளுமன்றம் அபிப்பிராயப்படுமிடத்து, அது, தீர்மானத்தின் மூலம், ஒரு தடவையில் ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதிக்குச் சட்டத்தின் நடைமுறைக் காலப்பகுதியை நீடிக்கலாம்.

தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தலும் அவரின் பணிகள் முதலியனவும்.

**2.** (1) அமைச்சர், பெயரினால் அல்லது பதவியினால், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக விருப்பதற்கென ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் அவருக்குத் துணைபுரிவதற்கு அவசியமாக விருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் ஆற்றுதலும் வேண்டும் :—

(அ) எந்தப் பொருள்தொடர்பில் 5 ஆம் பிரிவின்கீழான ஒரு கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பொருள் களஞ்சியப்படுத்தப்படுகின்ற எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்துச் சோதனையிடுதல் ;

(ஆ) 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்படும் எல்லாக் கட்டளைகளும் வலுவுறுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் ;

(இ) 5 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றின் நியதிகளின்படி ஏற்பாடுசெய்யப்படும் ஒழுங்கு படுத்துகைசார் முறைமையொன்றை நிருவகித்தலும் செயற்படுத்துதலும் ;

(ஈ) கொள்வனவு செய்யப்படும் ஏதேனும் பொருள் தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய சேகரிப்பு மற்றும் விநியோகம் தொடர்பான நடவடிக்கை முறைகளைத் தருதல்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரி, (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினால் அவருக்கு அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகிக்குமுன்னர், சொல்லப்பட்ட வளவுகள் எந்த நீதிவானின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளனவோ அந்த நீதிவானிடமிருந்து அத்தகைய நோக்கத்துக்காக ஆணைப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(5) அமைச்சரானவர், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், தகுதி வாய்ந்த அதிகாரிக்கும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப் படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப் படற்பாலதான ஊதியத்தைக் கட்டளைமூலம் தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய ஊதியம், திரட்டு நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) தகுதிவாய்ந்த அதிகாரியும் இப்பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்படும் அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காகவும் அதன் கருத்துக்குட்படவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அமைச்சர் பணிப்புகளை வழங்கலாம்.

3. அமைச்சரானவர், சட்டத்தினால் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அளிக்கப்படும் பணிகளை அவர் ஆற்றுவதற்கு அவசியமென அவருக்குத் தோன்றக்கூடியவாறாக அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளைக் காலத்துக்குக்காலம் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு வழங்கலாம். அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

4. (1) (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) அமைச்சரினால் நியமிக்கப்படுவதுமான மதியுரைக் குழுவொன்று இருத்தலும் வேண்டும் : சட்டத்தின் நியதிகளின்படி அமைச்சர் தனது தத்துவங்களைப் பிரயோகிப்பதன்பொருட்டு, அவருக்கு மதியுரையளித்தல் இதன் பணியாதல் வேண்டும். மதியுரைக்குழு.

(2) குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தவிசாளராகவிருக்கவேண்டிய, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஆ) வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(இ) கூட்டுறவுகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஈ) தகுதிவாய்ந்த அதிகாரி ;

(உ) கொள்கை அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(ஊ) பணிமனையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வியாபார பணிமனைகளின் பிரதிநிதியொருவர்.

(3) குழுவானது பின்வரும் பணிகளை ஆற்றுதல் வேண்டும் :—

(அ) இலங்கைக்கு வெளியே ஆயுதந் தாங்கிய பகைமைகள் ஏற்படுவதன்விளைவாக, இலங்கைச் சமுதாயத்தினரின் வாழ்வுக்கு அத்தியாவசியமான ஏதேனும் பொருளின் வழங்குகைகளில் தட்டுப்பாடொன்று இருக்கும் சாத்தியம் பற்றி அல்லது அத்தகைய பொருட்களின் விநியோகத்தில் ஏதேனும் தொடர்பு

றுத்தல் ஏற்படும் சாத்தியம்பற்றி அல்லது பகிரங்க வாழ்வுக்கு அத்தியாவசியமான பயன்பாடு சேவைகளைப் பேணுவதிலான ஏதேனும் இடையீடு ஏற்படும் சாத்தியம்பற்றி அமைச்சருக்கு மதியுரையளித்தல் ;

(ஆ) பொருட்களின் விற்பனை தொடர்பாக, பின்வருவன பற்றி அமைச்சருக்கு மதியுரையளித்தல் :—

(i) ஆகக்கூடிய எந்த மொத்தவிற்பனை மற்றும் சில்லறை விற்பனை விலைக்கு மேலாகப் பொருளொன்று விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை விலை ;

(ii) அத்தகைய மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை விலைகள் எந்த விலைக்கட்டமைப்புக்கிணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அந்த விலைக் கட்டமைப்பு ;

(iii) கடைப்பிடிக்கப்படவேண்டிய பங்கீட்டு முறைமை ;

(iv) கடைப்பிடிக்கப்படவேண்டிய கொள்வனவு செய்யும் முறைமை ;

(v) வழமையான சந்தைச் சக்திகளும் விநியோக முறைகளும் இயன்றளவு விரைவாக நடைமுறைக்கு வருவதை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை.

(இ) பயன்பாட்டுச் சேவைகளை வழங்குதல் தொடர்பாக பின்வருவனபற்றி அமைச்சருக்கு மதியுரையளித்தல் :—

(i) எவையேனும் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளின் வழங்குகைக்காக நிர்ணயிக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய விலை ;

(ii) ஆகக்கூடிய விலை எந்த விலைக்கட்டமைப்புக்கிணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அந்த விலைக்கட்டமைப்பை நிலைநாட்டுவதில் பயன்படுத்தப்படவேண்டிய வாய்ப்பாடு.

அவசரமான சேவைகள் கட்டளை.

5. (1) இலங்கைக்கு வெளியேயுள்ள குறித்தசில நாட்டினங்களுக்கிடையே ஆயுதந்தாங்கிய பகைமைகள் ஏற்படுவதன் விளைவாக, ஏதேனும் பொருளின் அல்லது ஏதேனும் சேவையின் தட்டுப்பாடொன்று இலங்கையில் உள்ளதென அல்லது இருக்கக்கூடிய சாத்தியம் உள்ளதென அமைச்சருக்குத் தோன்றுமிடத்து, அமைச்சரானவர், குழுவின் மதியுரையின் மேல், ஏதேனும் பொருளின் விநியோகத்தில் அல்லது கிடைக்கக்கூடியதாந்தன்மையில் அல்லது ஏதேனும் பொதுப் பயன்பாட்டுச் சேவையை வழங்குவதில் தொடர்புறுத்தல் எதுவும் இராதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கென அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், (இதனகத்துப்பின்னர் "கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அவசரமான சேவைக் கட்டளை" எனவழைக்கப்படும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம் —

(அ) எந்தப் பொருளொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பொருள், எந்த ஆகக்கூடிய மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை விலைகளுக்கு மேலாக விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை விலைகளை நிர்ணயிக்கலாம் ; அல்லது

(ஆ) எந்தப் பொருளொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பொருளின் ஆகக்கூடிய விலை அதற்கிணங்க நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு விலைக்கட்டமைப்பைக் குறித்துரைக்கலாம் ; அல்லது

(இ) எந்தப் பொருளொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பொருள் எந்த நிபந்தனைகளுக்கமைய விற்கப்படலாம் ; அத்தகைய

பொருளின் விற்பனை நேரமும் இடமும், அத்துடன் விற்கப்படக்கூடிய அத்தகைய பொருளின் அளவு என்பவற்றைக் குறித்துரைக்கலாம் :

(ஈ) எந்தப் பொருளொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பொருளின் வழங்குகைகள் அதன் விநியோகிப்பாளருக்கு அல்லது வியாபாரிகளுக்குக் குறித்தொதுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யலாம் : அல்லது

(உ) எந்தப் பொருளொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பொருள் பொது மக்களுக்கு அதற்கமைய கிடைக்கக்கூடியதாக்கப் படுகின்ற பங்கீட்டு முறைமையொன்றை ஒழுங்கு படுத்துவதற்கும் நிருவகிப்பதற்கும் ஏற்பாடு செய்யலாம் : அல்லது

(ஊ) எந்தப் பொருளொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தப் பொருளின் ஏற்றிச் செல்கைக்காகவும் கொண்டு செல்கைக்காகவும் ஏற்பாடுசெய்யலாம் : அல்லது

(எ) எந்தச் சேவையொன்று தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்தச் சேவை எந்நிபந்தனைகளின்கீழ் வழங்கப்பட வேண்டுமோ அந்நிபந்தனைகளை (வித்தியாசமான சேவைகளைக் குறிப்பாகத் தொடர்புபடுத்தி) குறித்துரைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது வேறுபடுத்தப் படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்படல் வேண்டுமென்ற பிரேரணையுடன் சேர்த்து, அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து இரு வாரங்களினுள் பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுதல் வேண்டும். பாராளுமன்றம் அத்தகைய காலப்பகுதியின்போது அமரா விடின், அதன்பின்னர் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் அது அவ்வாறு இடப்படுதல் வேண்டும்.

(5) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அத்தகைய ஏதேனும் கட்டளை அவ்வாறு நீக்கப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருட்களைக் கொள்வனவு செய்தல்.

6. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, எந்தப் பொருள் தொடர்பில் 5 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பொருளின் ஒப்புரவான விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கென அவ்வாறு செய்வது உசிதமானதாக அல்லது அவசியமானதாக இருக்கின்றதாக அவருக்குத் தோன்றினால், அத்தகைய நோக்கத்துக்காகக் கிடைக்கக்கூடிய தாகவுள்ள அல்லது அவசியமானதாகவுள்ள அத்தகைய பொருளின் ஏதேனும் அளவைக் கொள்வனவு செய்வதற்காகக் கட்டளையாக்கலாம். அத்தகைய ஏதேனும் பொருளைக் கொள்வனவு செய்வதற்காகவும் 5 ஆம் பிரிவின்கீழ் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனை விலையின் நியதிகளின்படி அத்தகைய கொள்வனவு தொடர்பில் கொடுப்பனவு செய்யப்படு வதற்காகவும் அவசியமானவாறான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும்,—

(அ) அத்தகைய பொருளின் கையிருப்புகள் எந்த ஆளின் உடைமையில் உள்ளனவோ அந்த ஆளின் பெயரை யும் முகவரியையும் கொள்வனவு செய்ய வேண்டிய திட்டவட்டமான அளவையும் ;

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட பொருளின் கையிருப்புகள் கட்டளையின் நியதிகளின்படி அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆளினால் ஒப்படைக்கப்படவேண்டிய நேரத்தையும் இடத்தையும்,

குறித்துரைத்தல் வேண்டும்.

(3) எந்தப் பொருள் தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி (1)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கொள்வனவுக் கட்டளையொன்றை ஆக்கியுள்ளாரோ அந்த ஏதேனும் பொருளைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விற்பனை செய்வதற்கு எவரேனுமாள் மறுக்கும் பட்சத்தில், தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய பொருளின் தேவைப்பட்ட அளவைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விற்பனை செய்யும்படி அத்தகைய ஆளை வலுக் கட்டாயப்படுத்தி, அந்தப் பொருள் எந்த நீதிவானின் நியாயாதிக்கத்தினுள் களஞ்சியப்படுத்தப்படுகின்றதோ அந்த நீதிவானிடமிருந்து கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

தவறுகள்.

7. (1) (அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி தகுதிவாய்ந்த அதிகாரி தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது தமது பணிகளை ஆற்றுவதில் அவரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற ;

(ஆ) 5 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றின் விடயமாகவுள்ள ஏதேனும் பொருளை 5 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி அத்தகைய பொருளை விற்பனை செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலாகவுள்ள ஒரு விலைக்கு விற்பனை செய்கின்ற;

(இ) அதன்கண் கூறப்பட்ட எவையேனும் விபரங்களின் பொய்யானதாகவுள்ள ஒரு கூற்றை அறிந்து கொண்டு கொடுத்துதவுகின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐந்தாண்டு

களை விஞ்சாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) நீதிமன்றமானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு ஆளொருவருக்குக் குற்றத் தீர்ப்பளிப்பதில், எப்பொருட்கள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அப்பொருட்கள் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு இழப்பிக்கப்படும் ஏதேனும் பொருள், —

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப்படாவிடின், அத்தகைய மேன்முறையீடு எக்காலப்பகுதியினுள் செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல், எத்தகையதுமான ஏதேனும் ஈட்டிலிருந்தும், அடைமானத்திலிருந்தும், சோந்தையிலிருந்தும் அல்லது வேறு வில்லங்கத்திலிருந்தும், பொறுப்பிலிருந்தும் அல்லது உரிமைக் கோரிக்கையிலிருந்தும் விடுபட்டதாய், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும் :

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மேன்முறையீடு இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டதன்மேல் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும் :

ஆயின், ஆளெவரும், அத்தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென்றும் அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்தாரென்றும் எண்பித்தால், தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

ஆட்கள் குழுவினால் புரியப்படும் தவறுகள்.

**8.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினாற் புரியப்படுமிடத்து, —

(அ) ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து, தவறு புரியப்படும் நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது வேறு இதேபோன்ற அலுவலர் ஒருவராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும் ;

(ஆ) ஆட்கள் குழுவானது ஒரு குழுமமாகவிருக்குமிடத்து, அக்குழுமத்தின் பங்காளி ஒவ்வொருவரும்,

அத்தவறு தமது சம்மதத்துடனோ அல்லது உட்கையுடனோ புரியப்படவில்லையென்றும், தமது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்க வேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**9.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கங்களுக்காக அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து

ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.